விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 தை 27 ஜ- அவ் 18 இதழ் 356
யழ்ப்பாணம் சனிக்கிழமை 9 2-1985


## வடக்கில் ஊரடங்குநேரம்: இரவு 7 அதிகாலை 4 வரை

[கொழும்பு]

யாழ்ப்பாணம், கிளிநொச்சி. முல்லைத்தீவு, மன்ஞர் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்கு நேரத்தில் இன்று முதல் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது.

மாலை ஏழு மணி முதல் அதிகாலை நான்கு மணிவரை புதிய ஊரடங்குச் சட்ட நேரம் அமுலில் இருக்கும்.

கடந்த நவம்பர் மாதம் முதல் மாலை ஆறு மணி தொடக்கம் அதிகாலை ஐந்து மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது.

வட பகுதியில் நெல் அறுவடைக் காலம் ஆரம்பித்துள்ளது என்றும், இப்பணியைச் சுமுகமாக இடம்பெறச்செய்யும் வகையிலேயே ஊரடங்கு நேரத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

வவனியாவில் ஊரடங்கு நேரம் இன்று முதல் இரவு பத்து மணி முதல் அதிகாலை

(6-ம் பக்கம்3-ம் கலம் பார்க்க)

## ● இலங்கைஇனப்பிரச்னை: மற்றுமோர் திருப்பம்!

# ஜே. ஆர். - ரஜீவ் மாலைதீவில் சந்திப்பு?

## அமைச்சர் லலித் இன்று டில்லியில்

(கே. ஜி. எம்.)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாகத் திடீரென மேற்கொள்ளப்பட்டிருக்கும் கொழும்பு – புதுடில்லி 'சந்திப்பின்' எதிரொலியாக, எதிர்பாராத சில மாற்றங்கள் ஏற்படலாம் என்று இந்திய மூத்த அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியின் நேற்றைய இந்திய விஜயத்தைத் தொடர்ந்து ஏற்படும் 'பலாபலன்'களின் அடிப்படையில், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் பாரதப் பிரதமர் திரு. ரஜீவ் காநதிக்குமிடையே எதிர்பாராத சந்திப்பு மாலைதீவில் இடம்பெறலாம் என்று நம்பகமாகத் தெரியவருகிறது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் மாலைதீவு ஜனாதிபதி ஜனப் அப்துல் கயூம் மேற்கொண்டுள்ளார்.

(6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

### மீனவர் விவகாரம்

[முல்லைத்தீவு]

கொக்கிளாய், நாயாறுக்கு ஆயுதப்பயிற்சி பெற்ற மீனவர் குழு ஒன்று மீண்டும் தங்கள்

[6-ம் பக்கம் 5ம்-கலம் பார்க்க]

## பாரிஸில் ஹமீத்

[பாரிஸ்]

பிரான்ஸ் வெளிநாட்டு அமைச்சரை இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனப் ஏ. ஸி. எஸ் ஹமீத் நேற்று பாரிஸில் சந்தித்து இலங்கையின் இனப்பிரச்னை குறித்து கலந்துரையாடினர்.

பிரான்ஸ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஜனப் ஹமீத் சந்தித்து கலந்துரையாடினர். [வெ]

## 2000 விவாயிகள் வேலைநிறுத்தம்

(கிளிநொச்சி)

விசுவமடுப்பகுதியில் கடந்த இரண்டு தினங்களாக 2000க்கும் அதிகமான கூலிவிவசாயிகள் திடீர் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

கடந்த வருடங்களில் சம்பள

[6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

எம். ஜி. ஆர். தேககசுகம்:

## நேர்த்திக்கடன் தீர்க்க பலர் ஆயத்தமாகின்றனர்

சென்னை, பெப் 8

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரன் தேக சுகத்துடன் தாயகம் திரும்பியதையடுத்து அவரது ஆதரவாளர்கள் பலர் தாம் வைத்திருந்த நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற ஆயத்தமாகிறுர்கள் என்று கூறப்பட்டது.

தமிழகத்தில் எம். ஜி. ஆர் ஆதரவாளர்கள் பலர் திருப்பதி, பழனி, சுவாமி ...

(6-ம் பக்கம் 3-ம் கலம்பார்க்க

## ஜனதிபதி செயலகம் தகவல்

[கொழும்பு]

''இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக மேலும் விரிவான ஆலோசனை நடத்த இந்தியா சென்றுள்ள அமைச்சர் லலித்தின் வருகையை எதிர்பார்த்துள்ளேன்'' என்று ஜனதிபதி ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி நேற்று ஜனதிபதியை ஜனதிபதியின் இல்லத்தில் சந்தித்தார். அப்போதே அவரிடம் மேற்கண்டவாறு ஜனதிபதி தெரிவித்தார்

திரு. செல்லச்சாமி இச்சந்திப்பின்போது; வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்களின் பிரச்னை குறித்து விரைவான அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்று வலியுறுத்தினர்.

அகதிகள் பிரச்னை குறித்து அவர் தெரிவித்ததாவது:- ''இந்திய வம்சாவளி அகதிகள்

(6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க

## அகதிகளுக்கு வங்கி ஊழியர் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு அகதிகளுக்கு அன்பளிப்பாக யாழ் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளை ஊழியர்கள் ஆயிரம் ரூபாவை முல்லைத்தீவு பிரஜைகள் குழுவிற்கு அனுப்பி வைத்துள்ளதாகப் பிரஜைகள் குழுவைச் சேர்ந்த டாக்டர் குணரத்தினம் தெரிவித்தார். [க]

## பிரிட்டனிடன், சீனவிடமிருந்து கவசவண்டிகள், ரைபிள்கள் படகுகள், ஹெலிகாப்டர்கள்!

பி. டி. ஐ. பெப். 8

பிரிட்டனிடமிருந்தும், சீனவிடமிருந்தும் இராணுவ சாதனங்களை இலங்கை பெருமளவில்வாங்கவுள்ளதாக பி டி ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஹெலிகாப்டர்கள், கவசவாகனங்கள், பீரங்கி ரோந்து விசைப் படகுகள், ரைபிள் துப்பாக்கிகள் என்னவே பிரிட்ட

(6-ம் பக்கம் 3-ம்கலம் பார்க்க]

## அரிசிவிலையில் வீழ்ச்சி ஏற்படும்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். மாவட்டத்தில் இம்மாதம் முடிவதற்குள் போதுமான அரிசி பெறக்கூடியதாக இருக்குமென்றும் இதன் காரணமாக அரிசியின் விலையில் வீழ்ச்சி ஏற்படுமென்றும் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு எஸ். பற்குணம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையேயான போக்குவரத்துச் வசதி சீராக இருந்தால் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாதென்றும் அவர் வலியுறுத்திச் சொன்னர்.

இப்பொழுது 800 தொன் சீனி கையிருபபில் இருப்பதால் ஓரளவு சமாளிக்க முடியும் என்று குறிப்பிட்ட

(6ம் பக்க 5 ம்கலம் பார்க்க)

● 83 ஜூலை கலவரம்

## 10 வீடுகளை எரித்தவருக்கு ஏழு வருடக் கடூழியம்

(திருகோணமலே)

1983ம் ஆண்டு ஜூலைக்கலவரங்களின் போது 10 வீடுகளை எரித்து நாசமாக்கியது தொடர்பான வழக்கில் எதிரியான லியனகே சுமணபால என்பவருக்கு திருகோணமலே மேல் நீதிமன்ற நதிபதி திரு. கி பாலகிட்ணர் 7 வருட கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

1983 கலவரங்களின் போது திருகோணமலையை அடுத்துள்ள அன் புவழிபுரம் என்ற கிராமத்தில் 10வீடுகளைஎரித்து நாசமாக்கியதாகவும் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தியதாகவும், சட்ட விரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் மொத்தம் ஒன்பது குற்றச்சாட்டுகளின் மீது எதிரிமீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஜூரிகள்

(6ம் பக்கம் 1-ம் கலம் பார்க்க)

## மற்றுமொரு மின்கம்ப 'மரண தண்டனை'

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு — கல்முனை பிரதான வீதியில் காத்தான்குடி ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள மின்சம்பம் ஒன்றில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத நபரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டுக்கட்டப்பட்டிருந்தார்

சடலத்துக்குஅருகில் சாணப் பட்ட சுவராட்டியில் மேற்படி நபர் பல சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டதால் மரண தண்டனை வழங்கப்படுவதாகவும் குறிப்பிடப் பட்டிருந்தது.

நேற்றிரவு வரை அடையாளம் காணப்படாத இச்சடலம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப் பட்டுள்ளது. [ரா]

## அமிர்தலிங்கம் கடத்தப்பட்டார்: நேற்று இரவுவரை வீடு திரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் நேற்றுமுன் தினமிரவு துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்ட பதில் நீதவானும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எஸ். அமிர்தலிங்கம் நேற்றிரவு வரை வீடு திரும்பவில்லை.

நேற்றுமுன்தினமிரவு சுமார் 10 மணியளவில் இருபாலையில் உள்ள அவரது வீட்டிற்குச்

[5ம் பக்க 4ம் கலம்பார்க்க]

## தணிக்கை!

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடந்த 1ம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை தொடர்ந்து அமுலிலுள்ளது.

# வரி விளம்பரம்

## தேவை

நல்ல நிலையில் அல்லது புதிய விற்பனைக்குள்ள ''டீ'' பிறிஜ் (Deep Freezer) தேவையாகவுள்ளது. தொடர்பு சீமாட்டி, 122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 1706

யாழ். நகரில் உள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு 40 வயதிற்கு மேற்பட்ட நல் ஒழுக்கம் உள்ள மின்பொறி, பைப் உபகரணங்கள் விற்பனையாளராகவும், ஆங்கில தட்டெழுத்து தெரிந்தவராகவும், மேலதிக வியாபார அனுபவம் உள்ளவராகவும், யாழ். நகரிலிருந்து 5 மைல்கள் சுற்றுடல்களுக்குள் வசிப்பவராகவும் முன்வேலை அனுபவத்துடன் எழுத்துமூலம் 18-02-85 க்கு முன் விண்ணப்பிக்கவும். அகதியாக வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளம்பர இல:- 1702 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1702

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலய மகளிர் இல்லத்தில் கடமையாற்றுவதற்கு பெண் உதவியாளர் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவராயும் குடும்பச்சுமை எதுவும் இல்லாதவராயும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த புலமையுள்ளவராயும் சைவ சமயத்தவராயும் உள்ளவரே மனுப்பண்ணலாம். விண்ணப்பம் 28-2-85 வரை ஏற்றுக் கொள்ளப்படும். தங்கம்மா அப்பாக்குட்டி, தலைவர். நிர்வாக சபை, ஸ்ரீதுர்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை. 1698

## தேவை

எமது நிறுவனத்திற்கு தகரவேலை (Tinker) செய்பவர்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும். எவர் சில்வர் இன்டஸ்றீஸ் லிமிட்டெட், இன்டஸ்றியல் எஸ்டேட், அச்சுவேலி. 1737

வெளிநாட்டில் உத்தியோகம் பார்க்கும் 27 வயதுடைய மணமகனுக்கு சைவவேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. சீதனம், மற்றும் விபரங்களுடன் புகைப்படமும் சேர்த்து தொடர்பு கொள்ளவும். இல: 1716 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1716

யாழ்ப்பாணத்தில் வேலைக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. இளைப்பாறிய பொலிஸ், ராணுவ, கடற்படை, ஆகாயப்படை வீரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: த. குணரத்தினம், சீநோர் பங்களா, வட்டுக்கோட்டை. 1746

## கல்வி

தனிப்பட்டவர்களுக்கும், குழுவினருக்கும் தகைமை பெற்ற பொறியியலாளரால் C. E. I. பகுதி I லண்டன் and இலங்கை, City and Guilds (மின்னியல்), லண்டன், இலங்கை க. பொ. த. உயர்தரம், மற்றும்க பொ.த. (சாதாரணம்) வகுப்புகளுக்குத் துரித மீட்டல் வகுப்புகள் நடைபெறும். குறிப்பிட்ட அளவு இடங்கள் மட்டும் உண்டு. விபரங்களுக்கு: 46, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம். 1703


# SCIENCE ACADEMY

JAFFNA.

B. M. C க்கு முன்பாக

சகல வகுப்புக்களும் வழமைபோல் நடைபெறுகின்றன.

வகுப்புகள் வழமையான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

(1742)



★ தூய அலுமினியம் ★ பிளாஸ்டிக்
★ எவர்சில்வர் ★ எனுமல் ★ கண்ணுடி
★ தாச்சி வகைகள் ★ ஓக்கிட் (ORCHID) வாளிகள் போன்ற பொருட்கள்

மங்கள வைபவங்களுக்கு உகந்த அன்பளிப்புப் பொருட்கள் யாவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு எமது உற்பத்திப் பொருட்களும் மற்றும் எனுமல், பிளாஸ்டிக் ஓக்கிட் வாளிகளும் விசேட கழிவுடன் வழங்கப்படும்.

உங்கள் வசதி கருதி ஹோம் பிறன்ஸ் சொகுசு பஸ் ஆசனங்கள் எம்மிடம் பதிவுசெய்து கொள்ளலாம்

# நியூலங்கா

## அலுமினியம் தொழிற்சாலை

(விற்பனைப் பிரிவு)

இல: 6, 30, ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

போன்: 23596


## விற்பனைக்கு

தெற்குப் புன்னாலைக்கட்டுவன் முச்சந்தியிலிருந்து நீர்வேலிக்குச் செல்லும் வீதியில் இரு கிணறுகளுடன் கூடிய 80 பரப்புத் தோட்டக்காணி உட்பட 180 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாக பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்கட்கு; அ சிவசம்பு விசாலாட்சி வித்தியாசாலை ஒழுங்கை, மல்லாகம். 1635

4-ம் குறுக்கு தெருவில் சின்னக்கடை சந்தைக்கு முன்பாக சகல வசதிகளுடன் கூடிய கடை ஒன்று உடனடியாக விற்பனைக்கு உண்டு தொடர்பு, No. 68: 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1732

## வாடகைக்கு

நன்னீர், மின்சார வசதியுடன் 5 அறைகளையுடைய விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 30, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 1733

அரியாலை கண்டி வீதி 366ம் இலக்க வீடு பங்குனி மாதம் முதல் வாடகைக்கு விடப்படும். மேற்குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 1735

## தவறிவிட்டது

முருகேசு சுப்பிரமணியம் என்பவரின் 253420812V இலக்கம் கலகெதற றேட், செங்கடகல விலாசமும் கொண்ட அடையாள அட்டையைக் கண்டெடுப்பவர்கள் கே. கே. சுப்பிரமணியம் அன் கோ, 146, பிரதானவீதி, பருத்தித்துறை [தொலைபேசி 568] யுடன் தொடர்பு கொள்க. 1741

கணபதிப்பிள்ளை தவராசா 601490285X இலக்கமுடைய அடையாள அட்டையும், நான் தொழில் புரியும் நிறுவன அத்தாட்சிக் கடிதமும் 3-2-85 பி. ப. 11-00 மணியளவில் நாவலர்வீதி, ஆனைப்பந்தியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து, 211, ஆசீர்வாதப்பர்வீதி, அரியாலை மேற்கு, யாழ். என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 1744

## குத்தகைக்கு

கச்சாய் றோட்டில் சாவகச்சேரி சந்தையில் இருந்து 150 யார் தூரத்தில் சகல வசதிகளுடனும், தளபாடங்களுடனும் சேர்ந்த கடை குத்தகைக்கு கொடுக்கப்படும். விபரங்கட்கு; அரியராசா, 3, கயிலாசபிள்ளை வீதி, சாவகச்சேரி, /182/2, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். 1708

## கேள்விப்பத்திரம்

# ஏல விற்பனை அறிவித்தல்

1. 2545 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவுத் திகதி 16-02-1985. விண்ணப்பப்பத்திரங்களுக்கும் விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

2. கீழ்க்குறிப்பிட்ட உபயோகித்த ரயர்கள், ரியூப்புக்கள் சங்க வளவில் 16-02-1985 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

லொறி ரயர்கள் —
8 25 — 20 —
7 ரயர், 2 ரியூப்
9.00 — 20 —
4 ரயர், 3 ரியூப்

பொதுமுகாமையாளர்.
தென்மராட்சி மேற்குப்
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி,
07-02-1985. (1734)

# மாணவரின் நோக்கம்

(மட்டுவில்)

''வாழ்வாங்கு வாழ மக்களுக்கு கல்வியே முக்கியம். அதுவும் இளமையில் கல்வி பசுமரத்தாணி போன்றது மாணவர்களின் நோக்கம் கல்வியிலிருந்து திசை திரும்பக் கூடாது.''

இவ்வாறு நுணுவில் கணேசா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை வாரத்தில் முன்னாள் அதிபர் திரு. கே. வல்லிபுரம் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினர்.

வித்தியாலய அதிபர் திரு. இ. மெய்யழகன் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது. பாடசாலை வாரத்தைத் தொடர்ந்து வகுப்பறை துப்பரவு செய்தல், மரம் நாட்டல் ஆகியனவும் இடம்பெற்றன.

# பண்டத்தரிப்பில் 1500 மீனவருக்கு உணவு முத்திரை

(பண்டத்தரிப்பு)

கடல் பாதுகாப்பு வலயத் திட்டத்தினால் தொழில்செய்ய முடியாது மிகவும் பாதிக்கப் பட்டுள்ள மாதகலைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் மீனவக் குடும்பங்களுக்கு உணவு முத்திரை வழங்குவதற்கான ஒழுங்குகளை பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி மேற்கொண்டுள்ளார்.

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள சுமார் ஆயிரத்து ஐநூறு மீனவக் குடும்பங்களுக்கும உணவு முத்திரை வழங்கப்படவுள்ளது.


# 1-வது பிறந்ததின வாழ்த்து

## ஸ்ரீஸ்காந்தன் ஸ்ரீபாலறஞ்சிதன்

மானிப்பாய் தெற்கு டாக்டர்கள் திரு. வி. ஸ்ரீஸ்காந்தன், ஸ்ரீஸ்காந்தன் பாலாம்பிகை தம்பதிகளின் செல்வமகன் ஸ்ரீபாலறஞ்சிதன் இன்று 9-02-1985 தனது முதலாவது பிறந்த தினத்தைக் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அப்பம்மா, மாமிமார், மாமாமார், சித்தப்பா, சின்னம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், செல்வராஜாமாமா (டுபாய்), தர்மராஜா மாமா (சவூதி), சண்முகநாதன் மாமா (ஜெர்மனி), தியாகராஜா பெரியப்பா (பிரான்ஸ்), மற்றும் அண்ணன்மார், அக்காமார் மானிப்பாய் மருதடி சித்திவிநாயகர் நல்லருள் பெற்று பல்கலைகளும் பயின்று பல்லாண்டு புகழ் பெற வாழ்த்துகின்றனர்.

றஞ்சிதா மெடிக்கல் கிளினிக்,
புளியடி மார்க்கட் ஒழுங்கை, மானிப்பாய்.

(1730)


# கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழ. இல: 15569

(1) பாமு இரத்தினசிங்கமும்,
(2) பெண் சிவபாக்கியமும், இருவரும்,
புலோலி தெற்கு, — வழக்காளிகள
எதிராக

(1) கணபதி இராசனும்,
(2) பெண் சின்னாச்சியும், இருவரும்
'கொத்தியவத்தை', புலோலிதெற்கு,
பருத்தித்துறை. — எதிராளிகள்

மேற்குறித்த வழக்கின் தீர்வைப்படியும், குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும், இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1985ம் ஆண்டு மாசி மாதம் 27ந் திகதி காலை 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனத்தின் மதிப்பிட்ட விலை ரூபா 35,720/-

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று வல்லிபுரக் குறிச்சியிறை ''கொட்டைநின்றவளவு'' நி. பர. 8 குளி 5 13/32 இது 1950-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17-ந் திகதி உலாந்தா மேஸ்தர் தா. சுப்பிரமணியம் அவர்களால் 1415-ம் இலக்கத்தில் அளந்து விந்தாரிக்கப்பட்டதும் 3709ம் இலக்கப் பிரிவிடல் வழக்கிலணைக்கப்பட்டதுமானபடத்தில் 3ம் நம்பர்த்துண்டுக்கு நி. பர. 1 குளி 16 43/64 வீடு வடலிகள், பனைகள் இதற்குள்ளிருக்கும் கிணற்றில் நாலிலொருபங்கும். எல்லை கிழக்கு; மாணிக்கம் கனகரத்தினத்திற்கும் பெண் விக்னேஸ்வரிக்குமுடையவாதனம். வடக்கு; கதிரன் வினசிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு: விநாசி சின்னப் பொடியனுக்கும், மறுபேருக்கும்முடையவாதனம் தெற்கு; ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்டவையடங்கலும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 10,960/-வும் மேலும் ரூபா 8000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு பதினெட்டு வீதம் வட்டி வழக்குத் தீர்வைத் திகதியாகிய 1980-ம் ஆண்டு ஆனி மாதம் 30ம் திகதியிலிந்து 1981ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது வீத வட்டியும், வழக்குச் செலவு 1893/- இதில் நடைபெற்ற செலவு 1276/- நடைபெறவேண்டிய செலவு 474/- மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 143/- கொடுபடவேண்டியிருக்கிறது. இதில் நடைபெற்ற செலவு 1276/- கொடுபட்டுள்ளது.

சி. சுந்தரலிங்கம்,
விற்பனவுக் கொமிஷனரும்,
நீதிமன்ற
விலைமதிப்பாளரும்.

தில்லைநாதன் வளவு,
சக்கடத்தார் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.
01-02-1985

1740

### மணிவாக்கு

இலங்கைவாழ் தெய்வ மெமையாளுந் தெய்வம்
கலங்கவிடாத் தெய்வம் காணின்—புலன் வழியிற்
செல்லவிடாத் தெய்வம் தேவர் தொழுந் தெய்வம்
நல்ல தெய்வம் நாடோறும் நாடு.

—சிவயோகசுவாமிகள்

## நமது நோக்கு

## காகங்கள் திட்டட்டும்

"கொடியவர்களின் கடைசிப் புகலிடம் தேசாபிமானம்" என்று ஆங்கில அறிஞர் ஒருவர் கூறியிருக்கிறார்.

தேசிய பந்தோபஸ்து அமைச்சுக்கு வந்து குவியும் பொருள்களும் நிதியும் தேசாபிமானத்தின் பெயரில் வழங்கப்படுகின்றன.

"நாட்டைப் பிளவுபடுத்திச் சீர்குலைப்பதற்காகச் சில தீயசக்திகள் தாண்டவமாடும் இந்த இக்கட்டான வேளையில்" என்று தொடங்கும் விளம்பரம் யாருடைய வள்ளன்மையில் விசுவாசம் கொண்டிருக்கிறது.

இன்று நாட்டைக் குட்டிச்சுவராக்கிச் சாதாரண மக்களின் வறுமை வாழ்வை வளர்த்துவரும் கட்டுப்பாடற்ற பொருளாதாரத்தால் குபேரரான கடத்தல்காரரும் கறுப்புச்சந்தை வர்த்தகரும்-ஒரு சொல்லில் புதுப்பணம் படைத்தவரே தேசபக்தர்கள்.

சுதந்திரதினத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு வாகனத்திலும், எங்கும் தேசியக் கொடி கட்டிப் பறக்கவிட்டால் இன்றைய இழிநிலை ஒழிந்துவிடமாட்டாது.

கொடியலங்காரத்துடன் நின்றுவிடாது நாட்டைக் கலக்கிவரும் வடபகுதி பயங்கரவாதிகளுக்கு உறுதுணையாயுள்ள இந்தியாவை இடைவிடாது திட்டவேண்டுமென்பதால் அரசாங்கப் பத்திரிகைகள் இட்டது சட்டமென முகாரி இராகம் வாசிக்கின்றன.

இராமேஸ்வரம் 'கடற் சண்டையில்' இலங்கைக்கு வெற்றி இல்லாதபோதும் பின்வாங்கவில்லையென்பதாய் தொடர்ந்தும் சண்டைக்குத் தயாராவது எதனைக் குறிக்கிறது?

இந்தியா இலங்கைமீது தாக்கும் திட்டம் தயாரித்திருக்கிறது; இதற்கு நாம் தயங்காது பதிலடிகொடுப்போமென்ற அளவிற்குப் பிரசாரம் தொடர்வதை ஆளுங்கட்சி தடைசெய்ய முன்வரவில்லை.

பெரிய சண்டியர் என்பக்கமென்று குட்டிச் சண்டியர் குரலெழுப்புவதை நாமறிவோம் சண்டித்தனம் ஈற்றில் மயான அமைதியாக மாறுகிறது

இலங்கைக்கு அமெரிக்கா ஆதரவு என்பதும், அமெரிக்கா இலங்கை போன்ற 'ஜனநாயக' ஆட்சியை குறிப்பாக ஜெயவர்த்தன ஆட்சிக்குக்குந்தகம் விளையவிடாதென்பதும் இந்த தீரத்துக்கு ஒருகாரணமெனலாம்.

அமெரிக்காவின் எல்லாவித உதவியும் பெற இலங்கை தனது திருகோணமலையையும் அதுபோன்ற கேந்திர நிலையங்களின் உதவியையும் குறிப்பாக அமெரிக்க குரலுக்கு நிலைய வசதியையும் அளிக்கச் சித்தமாயிருக்கிறது. வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையைக் கண்டு அஞ்சாத இன்றைய ஆட்சி இன்று தொடரும் போருக்கு ஒருநாளுக்கு 150 லட்சம் ரூபா செலவு செய்கிறது.

எல்லா விதத்திலும் பேடேறிக் கொண்டு போகும் தருணத்தில் செல்லும் செல்லாததற்கு எல்லாம் அமெரிக்கா உண்டு என்று நினைப்பது தவறென்பதை அமெரிக்க அரசே உணர்த்தியிருக்கிறது. மேலும் யாழ்ப்பாணத்துக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள அன்னியோன்னியம் ஆதி காலம் தொடக்கம் உண்டு.

இந்தியா அமெரிக்காவின் எதிரியாகமாறினால் திருகோணமலையால் என்ன பயன்? திருமதி இந்திராகாந்தி அமெரிக்காவின் அரசியல் ஆழநீளங்களை அறிந்து அணிசேராக் கோட்பாட்டுக்கமைய, வெளி வெளியாக அமெரிக்காவின் இரண்டாட்டத்தை பொறிபறக்கக் கண்டித்துவந்தார்,

இன்றொரு மாற்றமடையும் சூழ்நிலையில் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி எந்த வல்லரசுடனும் பகைக்காது நாட்டை வேகமாக நவீனமயமாக்குவதில் நம்பிக்கைகொண்டிருக்கிறார். சமத்துவபுத்தியின் வடிவமாகக் காணப்படும் ரஜீவ் வல்லரசுகள் இருவரின் உதவியை நாடுவதில் தயங்கமாட்டாரெனினும். அதேசமயம் வல்லரசுகள் இருவரும் இந்தியாவின் நட்புரிமைகொள்வதில் போட்டிபோட்டாலும், அது தமக்குமட்டுமே பிரத்தியேகமென்று கருதவில்லை.

இலங்கைக் காகங்கள் ஐ. தே. கட்சியின் தலைவர்கள் பலர் வாயில் வந்தபடி பேசிவிட்டு பின்னரே சிந்திப்பது ஒரு மரபாகிவிட்டது. அறுகம்புல்லில் ஆனை அடி சறுக்குவது இயற்கை என்பதையும், பசுவே இந்திய பண்பாட்டின் சின்னமென்பதால், இங்குள்ள காகங்கள் எவ்வளவு திட்டினாலும்மாடு சாகாதென்பதையும் நினைவிற்கொள்வது நலம்.

## கட்டில்கால்போல் பஞ்சபாண்டவர்

# கதையானமாநாடு

## அமெரிக்கா சென்று திரும்பியபின் ஞானோதயம்; இனியாருடன் பேச்சு

"பஞ்சபாண்டவர் எண்டால் தெரியுமோ? கட்டில் கால்போல மூன்று பேர்என்று சொல்லி இரண்டைக் காட்டி ஒன்றை எழுதி அதையும் அழித்தானாம்"

இது ஒரு நாடோடிப் பழமொழிக்கதை.

பெரும் ஆரவாரத்துடன் உள்நாட்டிலும் உலக நாடுகளிலும் பெரும் நம்பிக்கையை ஊட்டக்கூடிய வகையில் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன கூட்டிய சர்வகட்சி-வட்டமேசை மாநாடும் அந்த மாநாட்டில் அவர் கடைசியில் சமர்ப்பித்த யோசனைகளும் பின்னர் அந்த மாநாட்டை அவர் முடித்துவைத்த முறையும் இறுதியில் அவரது அமைச்சரவையே அவரது யோசனைகளை ஏதோ ஒரு காரணத்தை சொல்லிக் கைவிட்ட விதமும்; பஞ்சபாண்டவர் என்றால் தெரியுமோ என்ற கதையைத் தான் நினைவூட்டுகிறது.

எஸ். எம். ஜி.

வட்டமேசை மாநாட்டின் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும் என்றிருந்து வந்த நம்பிக்கையும் இன்று அற்றுப்போய் விட்டது.

இலங்கை அரசியல் சுதந்திரமடைந்த பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளையும் உணர்ந்து மாற்றுவழி காணவேண்டுமெனத் தமிழ்த் தலைவர்கள் சிலர் குரல் கொடுத்தார்கள். இரண்டு கட்சிகளுக்கிடையிலோ நடைபெறும் பேச்சுவார்த்தைகளினாலோ, செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்களினாலோ எதுவித பயனுமில்லை என்ற முடிவு கடந்தகால பயனற்ற நிகழ்ச்சிகளால் பொதுவாக மக்கள் மத்தியில் ஏற்பட்டது. அரசியல் கட்சிகள் சிலவும் இதை எடுத்துக் கூறின.

1977-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு சர்வகட்சி மாநாடு கூட்டிப்பேசி சுமுகமான முடிவு காணப்போவதாக திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன

(5-ம் பக்கம் 1-ம் கலம் பார்க்க)

## மக்கள் கருத்து

### நியாயமும் நிவாரணமும் வழங்குக

நான்கு பிள்ளைகளுக்குத் தாயான நான் வாழ்க்கைப் பயணத்தில் அடிபட்ட ஒரு விதவை. எனது கணவனார் பாதுகாப்புக்கருதி யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்தில் எம்முடைய நகைகளை வைப்பதற்கு ஏற்பாடுசெய்தார் நியாயமான வழக்கறிஞர்எனப் புகழப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட எனதுகணவரை 1977-ம் ஆண்டு கலவரத்தின் அநீதியின் உச்சம்கண்டு அதிர்ச்சியடைந்தவரை காலன் எம்மிடம் இருந்து பறித்தான்.

ஓய்வூதியமற்ற நிலையில் எனக்கு ஏற்பட்ட நிர்க்கதியான வாழ்க்கை நிலையான நகைகளை அவ்வப்போது விற்பதன் மூலம் ஒருவாறு ஓட்டிச் செல்லப்பட்டது. திருமணவயதடைந்த எனது இரு பெண்களுக்குரிய அவசியமான நகைகளுடன் எனதுகடைசி காலத்திற்குமென ஒரு சில நகைகளையும் மேற்படி வங்கியில் வைத்திருந்தேன் வங்கியிலிருந்த அனைத்து நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. என்னைப் போல் அனாதரவான நிலையை எத்தனையோ குடும்பங்கள் அடைந்துள்ளன.

ஈழநாடு ஆசிரியர் தலையங்கத்தின் பிரகாரம் இதனைச் செய்தவர்கள் பிழையான செயலை உணர்வார்களென நம்பினேம். கொள்ளையடிக்கப்பட்ட பொதுமக்களுடைய பொருட்களனைத்தும் எமது கலாசார விளக்கங்கள். தெரிந்தோ தெரியாமலோ எம்மவர்களே எமது செல்வத்தை அழித்தலாகாது.

பஞ்சமா பாதகங்களான கொலை, கொள்ளை, மோசடி என்பவற்றுக்கு தண்டனை வழங்கி நியாயம்காண முற்பட்ட இப்பிராந்தியத்திற்குரிய எம் இளைஞர்கள் இயக்கமற்று இவ்விடயத்தில் இதுவரை இருப்பது எம்போன்றவருக்கு கவலையளிக்கின்றது. சம்பந்தப்பட்டவர்கள் தமதுபிழைகளை உணர்வார்களா? அல்லது உணர்த்தப்படுவார்களா?

காலம் விடையளிக்கும் என்றில்லாமல் விரைவாக, சமயோசிதமாக நடவடிக்கை எடுத்து மேற்படி கொள்ளையடிக்கப்பட்ட நகைகளையும் சேதப்படுத்தாது வங்கியிலே ஒப்படைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழிவகைசெய்வது தமிழ்ச் சமுதாயத்தின் நன்மைக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமாவது தமிழ் இளைஞர்களின் கடமையாகும்.

ஒருபெண் நகைகளுடன் நடுநிசியிலும் பாதிக்கப்படாது சுதந்திரமாக நடமாடும் காலமே உண்மையான சுதந்திரமென மகாத்மா காந்தி சொன்ன சுதந்திர விளக்கத்தை சகலரும் உணரவேண்டும்.

திருமதி மனோன்மணி
கதிர்காமலிங்கம்

### சுயநலம் ஒழியும் காலம் வராதா!

பௌர்ணமி தினத்தன்று எங்கள் சேவாச்சிரமத்தில் 200 பேர்கள் மதிய உணவு பெறவந்திருந்தார்கள். பாதிக்கப்பட்டவர்களும் பலர்வந்திருந்தார்கள் எதையும் பாராமல் 80 கொத்து அரிசி பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது ரூபா 1500/- அளவு செலவழித்தோம் மீண்டும்பலருக்கு உதவும் நோக்கத்தில் பருத்தித்துறையில் உள்ள ஒரு வங்கியில் எங்கள் சேவாச்சிரமகணக்கு இருக்கிறது. வாசலில் நிற்பவர் எங்கள் கணக்கைபார்க்க உதவ மறுத்துவிட்டார். ஒரு தமிழர் ஆங்கிலேய உடையில்வந்தார் அவருக்கு ஆகவேண்டியதை வாசலில் நின்றவர் சொல்லி அனுப்பிவிட்டு. என்னை நாளைக்கு வரும்படி சொன்னார். தமிழன், ஆங்கிலமோகம் மாறும்நாள் எப்பவரும்? பலர் துன்பப்பட ஒருசிலர் அக்கறையில்லாமல் இருப்பதனால்தான் எங்களுக்கு விடிவுகாலம் வரவில்லை சுயநலம் ஒழிந்தால் வெகுசீக்கிரத்தில் பசுமைப் புரட்சிஏற்படும். இது எங்கள் நம்பிக்கை

சித்ரூபானந்தா
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.

### எடுத்துச் சென்றவற்றை திருப்பித்தாருங்கள்

தமிழ்மக்களின் பாரம்பரியமான விவசாயத்திற்கு அரும்பெரும் சேவையாற்றி, விவசாய பெருங்குடி மக்களின் சிறந்த சேவையால் நன்மதிப்பைப் பெற்றுள்ள ஏ. பவர் அன் கோ லிமிட்டெட் ஆகிய எமது நிறுவனத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களையும், ஜீப்பையும் திருப்பித்தருமாறு வேண்டிக்கொள்கிறோம்.

இலாப நோக்கமற்ற சேவையே நோக்கமாகவும் கொண்ட சுவிற்சலாந்து தேசத்தவர்களால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு இப்போதும் அவர்களால் நிர்வகிக்கப்பட்டுவரும் இந் நிறுவனத்தினர் வடமாகாண மக்கள் விவசாயத்தில் எதிர்நோக்கும் கஷ்டங்களை உணர்ந்து யாழ்ப்பாணத்தில் ஒருகிளையை ஆரம்பித்து இப்பகுதி விவசாய மக்களுக்கு சேவைசெய்து கொண்டிருக்கும்நிறுவனத்தை இப்படிசெய்வது நியாயமா? இதன் லாபப்பணம் தர்மஸ்தாபனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

கொள்ளை நடவடிக்கையால் இந் நிறுவனத்தின் ஊழியர்களும், விவசாயிகளும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். எனவே கடத்தியவர்கள் யாராக இருந்தாலும் உடனே மனிதாபிமானத்தோடும் நிறுவனத்தின் நல் நோக்கத்தை கருத்தில்கொண்டும், விவசாயிகளின் எதிர்காலத்தை சிந்தித்தும் பொருட்களையும், வாகனத்தையும் திருப்பி கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம் விவசாயத்தை மேற்கொள்ளும் அனைவரும் இவ் விஷயதில் ஒத்துழைக்குமாறும்கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஊழியர்கள்;
ஏ. பவர் அன் கம்பனி
லிமிட்டெட்
யாழ் கிளை

## நீதிமன்றம் செல்வதில்லை

# ஊர்காவற்றுறை

## சட்டத்தரணிகளும் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் சட்டத்தரணி ப. கதிரவேலு தலைமையில் நடத்திய அவசர கூட்டத்தில் நீதிமன்றங்களுக்குச் செல்வதில்லை என ஏகமனதாக தீர்மானித்தது

கடந்த புதன் யாழ். சட்டத்தரணிகள் சங்கம் வரும் 20ந் திகதிவரையில் நீதிமன்றங்களுக்கு செல்வதில்லை என எடுத்துள்ள முடிவுக்கு அமையவும் ஆதரவாகவும் இவ்விதம் தீர்மானிக்கப்பட்டது.

வரும் 20ந் திகதி யாழ். சட்டத்தரணிகள் சங்கம் இவ்விடயம் தொடர்பாக மீண்டும் கூடி ஆலோசிக்கவுள்ள கூட்டத்தில்ஊர்காவற்றுறை சட்டத்தரணிகள் சங்கமும் கலந்து கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் 'லலித்' பார்த்தசாரதியை சந்திப்பார்

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சனை குறித்து இந்தியப்பிரதமர் திரு. ரஜீவ்காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இன்று புதுடில்லி போய்ச் சேரும் தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத் முதலி இந்திய வெளியுறவு கொள்கை வகுக்கும் கமிட்டித்தலைவர் திரு ஜி. பார்த்தசாரதியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவாரென்று புதுடில்லிவட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பாக இந்திய அரசின் சிரேஷ்ட அமைச்சர்களையும் திரு. அத்துலத்முதலி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இந்தியத் தூதுவர் மாத்ரே கொலைவழக்கு:

# 2 பாகிஸ்தானியர்களுக்கு ஆயுட்காலச்சிறை

லண்டன், பெப். 8

பர்மிங்ஹாமில் வைத்து இந்தியதுணைத்தூதுவர் திரு. ரவீந்திரமாத்தே கொலைசெய்யப்பட்டது தொடர்பாக நடந்த வழக்கு விசாரணையில் இரு பாகிஸ்தானியர்களுக்கு ஆயுட் காலச்சிறைத்தண்டனையை பர்மிங்ஹாம் நீதிமன்றம் விதித்தது.

இது தொடர்பாக ஏனைய மூன்றுபேருக்கு சிறைத்தண்டனையும், ஒருவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் பாடகர் காலமானார்

லண்டன், செப். 8

பிரபல பிரிட்டிஷ்பாடகர் மாக்மன்ரோ புற்றுநோயினால் காலமானார். இறக்குட்போது அவருக்கு 52 வயதாகும்.

## பாகிஸ்தானில்

# எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது

இஸ்லாமாபாத், பெப். 8

பாகிஸ்தானில் கடந்த இரு நாட்களில் 140 எதிர்க்ட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 25-ம் திகதி பாகிஸ்தானில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை எதிர்த்துப் பிரசாரம் செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

## 10, 000பேர் வேட்புமனுத் தாக்கல்

புதுடில்லி, பெப். 8

ஏழுமாநிலங்களுக்கும், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் நடைபெறவுள்ள சட்டசபைத்தேர்தலில் போட்டியிட்ட 10,000க்கும் அதிகமானவர்கள் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர்

ஆந்திராபிரதேச முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் மூன்று தொகுதிகளில் போட்டியிட வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளார்.

ஆந்திரா சட்டசபைத்தேர்தலில் போட்டியிட 900க்கும் அதிகமானவர்கள் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர்.

வேட்புமனுக்கள் இன்று பரிசீலனைக்கு எத்துக்கொள்ளப்படவுள்ளன.

## உலகநகைச்சுவை மகாநாடு

(புதுடில்லி)

உலக நகைச்சுவை மகாநாடு ஹைதராபாத்தில்ஆரம்பமாகியுள்ளது. இம்மாநாட்டில் 150 பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

கேலிச்சித்திரம், திரைப்படம், நகைச்சுவை ஆகிய நிகழ்ச்சிகள் இம்மகாநாட்டில் இடம்பெறவுள்ளன.

# உணவுப்பொருள் தட்டுப்பாடு விரைவில் நீங்கும்!

## அதிகாரிகள் நம்பிக்கை

[வண்ணார்பண்ணை]

யாழ்ப்பாண மாவட்டத்தில் உணவுப்பொருட்களுக்கு ஏற்பட்டுவரும் தட்டுப்பாடு விரைவில் நீங்கிவிடும் என்று அரச அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள உணவுப்பொருட் களஞ்சியங்களில் போதிய இருப்பு இல்லை என்றும், கூட்டுறவுச் சங்கங்களில் உணவுப்பொருட்கள் கிடைப்பதில்லை என்றும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதி தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டபோது மேற்படி தகவல் கிடைத்தது.

சில கூட்டுறவுச் சங்கங்களில் உணவுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருந்துவருவதாகவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் வழங்கப்படும் உணவு முத்திரைசளுக்குக்கூட அரிசி, மா போன்ற உணவுப்பொருட்களை விநியோகிககமுடியாத நிலை இருந்துவருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதுபற்றி உணவுக்கட்டுப்பாட்டதிகாரிகளிடம் விசாரித்தபோது ஏற்போதைய நாளாந்த நிலையைச் சமாளிக்கக் கூடிய அளவு சீனி இருப்பில் உள்ளதென்றும், கூட்டுறவுச் சங்கச் மாஜங்களுக்கு நாளாந்த நிலைமைகளைச் சமாளிக்கக் கூடிய அளவு உணவுப்பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் திங்கட்கிழமை மா கப்பல் ஒன்று வடபகுதிக்கு வரும் என்று நம்புவதாகவும் தெரிவித்தனர்

அரிசி விநியோகம் போதாமையால் உள்ளூர் மில் முதலாளிகளிடமே அரிசி கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கள் விற்றுவருவதாகவும் இந்த நிலைமை நீடித்தால் அரிசிக்குக் கூடபெரும்தட்டுப்பாடும் விலை ஏற்றமும் ஏற்படும் என்றும் கூட்டுறவுச் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு சென்ற அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் இது விடயமாகவும் உணவு ஆணையாளரிடம் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாசவும் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபரும் மாவட்ட இணைச் செயலாளருமான திரு எஸ். பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

## அதிபராக நியமனம்

(பண்டத்தரிப்பு)

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் கடந்த 21 வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. அ. ஸ்ரானிலாஸ் இம்மாதம் தொடக்கம் குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலத்தின் அதிபராக பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கொள்ளை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ஆரையம்பதி ப. நோ. கூ. சங்கத்தில் நேற்று முன் தினம் துப்பாக்கி முனையில் இனந்தெரியாத மூன்று இளைஞர்களினால் 22.000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

### ஏறுவூரில்

ஏறுவூரிலுள்ள தனியார் கம்பனியொன்றிலும் நான்கு இனந் தெரியாத துப்பாக்கி இளைஞர்களினால் அன்றையதினம் சுமார் 22,500 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## 62 பேர்வேட்புமனு தாக்கல்

சென்னை, பெப். 8

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்ட சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 62 பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கான கடைசிநாள் நேற்றாகும்.

## ரூபவாஹினி

மாலை

5-00 — செய்திகள்
5-05 — ஆங்கிலத் தொடர் நிகழ்ச்சி
6-00 — ஆங்கில விவரண நிகழ்ச்சி
6-30 — செய்திகள் [தமிழ்]
7-00 — ஆங்கிலநிகழ்ச்சி
8-00 — செய்திகள் (சிங்களம்]
8-25 — சிங்கள தொலைக் காட்சி நாடகம்
9-00 — செய்திகள் [ஆங்கிலம்]
9-20 — சிங்கள விவரண நிகழ்ச்சி
9-50 — ஆங்கிலநிகழ்ச்சி
10-40 — ஒளிபரப்பு முடிவு

## தி. மு. க. வேட்பாளர்

சென்னை, பெப். 8

திருப்பத்தூர் தொகுதி சட்ட சபைத் தேர்தலில் தி. மு. க. வேட்பாளராக திரு கே. சண்முகம் போட்டியிடவுள்ளார்.

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் வட்டு வினி அருள் மிகு கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

## மகளிர்மன்ற ஆண்டுவிழா

(சுண்டுக்குளி)

நாவாந்துறை சென். நீக்கிலஸ் மகளிர்மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை கொண்டாடப்படவிருக்கிறது. நாட்டு நிலைமை காரணமாக அடக்கமாக நடைபெறவிருக்கும் இவ்விழாவையொட்டி சென் நீக்கிலஸ் தேவாலயத்தில் ஞாயிறு அதிகாலை பங்குத் தந்தை வண பிதா பி. எம். இம்மனுவல்அடிகளால் பாடற் பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ்விழாவினை யொட்டிப் பகுதி விசேடசேவை அதிகாரி திரு எம். சுந்தரலிங்கம் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச்செய்தியில் இம்மகளிர் மன்றத்தின் சேவையைப் பாராட்டியுள்ளதோடு மன்றத்தின் பணி மேலும் சிறக்க வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.


# பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

இதோ மீண்டும் ஆரம்பம்

முற்றுகச் சீர்திருத்தி அமைக்கப்பட்டுள்ளது

இடை நிறுத்தப்பட்ட சகல வகுப்புகளும் பயிற்சிகளும்

**20-02-1985-ல் ஆரம்பமாகும்**

கீழ் குறிப்பிட்டவைக்கான அடுத்த

**வகுப்புகளும் பயிற்சிகளும்**

எதிர்வரும்

**புதன்கிழமை 20–02–1985-ல் தொடங்கும**

ஆறு (06) மாதகால இடைநேரப் படிப்பும் பயிற்சியும்:

- ★ கொம்புயூட்டர் புறோகிறுமிங் (COMPUTER PROGRAMMING)
- ★ கட்டிடப் படம் வரைதல் (பில்டேர்ஸ் குவாண்ரிற்ரீஸ் உட்பட) (DRAFTSMANSHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES)
- ★ மோட்ரோர் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
- ★ எலக்ரிக்கல் என்ஜினியரிங் வேர்க்ஸ் டிப்புளோமா (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA)
- ★ எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS)

மூன்று [03] மாத கால இடைநேர வகுப்புகளும் பறயிசிகளும்:

- ★ றெவ்(F)றிஜறேஷன் (REFRIGERATION)
- ★ எலெக்ரிக் வெல்டிங் (WELDING - ARC)
- ★ கடைச்சல் யந்திரம் இயக்குநர் (LATHE OPERATAR)

- ★ வீட்டு மின் இணைப்பு (ELECTRICAL HOUSE WIRING) — ஆறு (06) கிழமை இடைநேர வகுப்பும் பயிற்சியும்
- ★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING) — ஒரு(01) மாத கால இடைநேர வகுப்பும் பயிற்சியும்
- ★ ஆங்கில வகுப்புகள் (SPOKEN ENGLISH)

இவ் வகுப்புகளும் பயிற்சிகளும் முழுமையான வசதிகளுடன் தகைமை வாய்ந்த அனுபவம் கொண்ட ஆசிரியர்களாலும் தொழில்நுட்ப வலலுநர்களாலும்நடாத்தப்படும்.

வகுப்புகளிலும் பயிர்சிகளிலும் சேர விரும்புவோர் இந்த நிறுவனத்திற்கு நேர்முகமாகவந்து இந்த நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பிக்கவும். தபால் மூலம் விண்ணப்பப் பத்திரங்களோ விபரங்களோ அனுப்பப்படமட்டாது

ஒவ்வொரு வகுப்புக்கும் பயிற்சிக்கும் ஆகக் கூடியது 15 பேர் மட்டும் விண்ணப்பிக்கும் கிரமப்படி சேர்க்கப்ப்படுவர்.

உடனடியாகக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தவிர்க்கவும்.

பதிவாளர்,

பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

இல:59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# கட்டில்கால் போல்

(3-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்திருந்தது.

## வாக்குறுதியை நிறைவேற்றவில்லை

ஆனுல் ஆட்சிபீடத்துக்கு அது வந்ததும் இந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றுலும் தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகித்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் பிரதமராகப் பதவியேற்ற திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு பேச்சுவார்த்தை நடத்தினுர். புதிய அரசியமைப்பு உருவாக்கப்பட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனுதிபதியாகத் திரு. ஜே. ஆர். பதவியேற்ற பின்னரும் தமிழ் மக்களின் பிரச்னைகள் சம்பந்தமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தினுர்

சொல்லொன்று செயல் வேருக அரசு நடந்துகொண்டதால் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லையென்று கூட்டணித் தலைவர்கள் தீர்மானித்துப் பேச்சுவார்த்தையைக் கைவிட்டனர்.

1977 ஆம் ஆண்டுவரை பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் சாத்வீகப் போராட்டங்களும் நடத்திவந்த தமிழ் அரசுககட்சியும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் 1977-ஆம் ஆண்டின் பின் ஜே ஆர். ஜயவர்த்தனுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்ததையும் போராட்டங்கள் எதையும் மேற்கொள்ளாததையும் கண்டு இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது. இதே சமயம் அரசு தமிழ் மக்களின் உரிமைகளைப் படிப்படியாகப் பறித்து அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததைக்கண்டும் விரக்தியும் வெறுப்பும் தமிழ் இளைஞர் மத்தியில் வளர்ந்தது.

இதன் விளைவுதான் தீவிரவாத இளைஞர்களின் ஆயுதப் போராட்டம்.

## கூட்டணியுடன் இனிப் பேச்சில்லை

தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் இனித்தாம் பேச்சு நடத்தப்போவதில்லை என்று ஜனுதிபதி ஜே. ஆர். தெரிவித்திருக்கிறுர்.

இலங்கையில் இனப்பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாணப்படவேண்டுமென்பதை எல்லோருமே கூறுகின்றனர். ஆனுல் இது எப்படி நடைபெறுகிறது?

கூட்டணித் தலைவர்களுடன் இனிப் பேச்சுவார்த்தைஇல்லை. சரி தீவிரவாதத் தலைவர்களை அழைத்து நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினுல் விரைவில் பிரச்னைகளுக்குத் தீர்வு காணலாம்.

இது உள்நாட்டு விவகாரம் இந்தியத் தலைவர்களுடன் இது பற்றிப் பேசத்தேவையில்லை என்று ஓர் அமைச்சர் கூறினுர்

இரகசியமாக அமெரிக்கா சென்ற தேசிய பந்தோபஸ்து அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான திரு லலித் அத்துலத்முதலி, 'இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணுவது தொடர்பாக ஆலோசனை நடத்தவே அமெரிக்கா சென்றேன்' என்று ஒரு பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருக்கிறுர்,

இலங்கையில் பிறந்து அமெரிக்காவும் இன்று பெரிதும் மதிக்கும் இந்திராகாந்தி குடும்ப நண்பரும் அரசியல் சாஸ்திரத்தில் இன்று நிபுணராக விளங்குபவருமான திரு புல்ஜெரன்ஸ் சமீ த்தில்கூட இந்தியாவை அமெரிக்கா பகைத்துக்கொள்ள விரும்பாதென்றும் அமெரிக்காவையும் சீனுவையும் எதிர்பார்த்துக் கொண்டிராமல் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படியும் இலங்கையின் இனப்பிரச்னைக்கு இதன் மூலம் நல்லதீர்வு காணமுடியுமென்றும் யோசனை கூறியிருந்தார்

இந்தியாவுக்குப் போகாமல் அமெரிக்காவுக்குச் சென்று திரும்பிய அமைச்சர் அத்துலத்முதலி இப்பொழுது மாகாண சுயாட்சிதன் நீதியான அரசியல் தீர்வாக முடியும் என்று கூறுகிறுர் அரசியல் தீர்வு என்று சொல்லிச் சொல்லி இராணுவத்தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சிகள் நாட்டை 'வங்குரோத்து' நிலைக்குத்தான் கொண்டு செல்லுமே தவிர பிரச்னையைத் தீர்க்க மாட்டாது.

அமெரிக்காவும் மற்றும் மேல் நாடுகளும் கொஞ்சம் விறைப்பாகச் சொன்னுல் தான் இங்குள்ளவர்களுக்குப் புரியும் போலும்!

# கவிதை நூல் வெளியீட்டு விழா

(ஊர்காவற்றுறை)

காவலூர் இலக்கிய வட்டத்தின் வெளியீடான 'நிகழ்வுகளும் உணர்வுகளும்' நூல் வெளியீட்டு விழா நாளை மாலை கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான றமேஸ் வேதநாயகம், சபாஉதயகுமார் எழுதிய இக்கவிதை நூல் வெளியீட்டு விழா திரு. ஆ சபாரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. திரு. எஸ். ஏ. ஈ. இரத்தினராசா, பண்டிதர் சோ. தியாகராசா உட்பட பலர் உரையாற்றுவர்'


றீகல் மினி

தினசரி 10-15, 1-30 மட்டும்

விஜயகாந் — சசிகலா நடிக்கும்

பி. எஸ். வீரப்பாவின்

சபாஷ்



லிடோ சினிமா

தினசரி 10-30, 2-00

இன்று முதல்

ஜெய்சங்கர், K. R. விஜயா நடித்த

முகூர்த்த நாள்

வெலிங்டன் (யாழ். நகர்)

10-30, 2-15.

கமல் - மாதவி

டிக் டிக் டிக் (கலர்)


# பாதுகாப்பு கருதியே மாற்றம்

[யாழ்ப்பாணம்]

பவர் அன் கம்பனியின் யாழ்ப்பாணக்கிளை மூடப்படவில்லை இக்கிளை மூடப்பட்டதாக செய்திகள் வெளிவந்தபோதும் இக்கிளை இயங்கிக் கொண்டிருக்கிறது.

அண்மையில் இக் கிளையிலிருந்து சில பொருட்கள் கொழும்புக்கு ஏற்றிச்செல்லப்பட்டன. இப் பொருட்கள் கிளை மூடப்பட்டதனுல் ஏற்றிச் செல்லப்படவில்லை. பாதுகாப்புக் கருதியே ஏற்றிச் செல்லப்பட்டதாம்.

இக்கம்பனியின் மோட்டார் சைக்கிள்களும், மருந்து தெளிக்கும் கருவிகளும் லொறி ஒன்றில் ஏற்றிசசெல்லப்பட்டபோது இனந்தெரியாதவர்களினுல் வழிமறிக்கப்பட்டு மோட்டார் சைக்கிள்கள் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

# "வடமராட்சி வீதிகளை திருத்தி அமைக்கவும்"

## பரு. பிரஜைகள் குழுத்தலைவர் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''வல்லை விதியிலுள்ள மதகுகள் தகர்க்கப்பட்டதினுல் பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, தொண்டமானுறு வீதியும் தற்போது போக்குவரத்து தடைப்பட்டுள்ளது இந்தப்பகுதிகள் தற்போது யாழ்ப்பாணத்துடனுன தொடர்புகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளன.''

இவ்வாறு பருத்தித்துறை பிரஜைகள் குழுதலைவர் பேராசிரியர் வி. கே கணேசலிங்கம் யாழ். அரசாங்கஅதிபருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளார்

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-:

''கடந்த ஜனவரி 13ம் திகதி இரவு மதகுகள் தீவிரவாதிகளினுல் தகர்ககப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது. இதன்பின்னர் இந்தவீதிகள் மீண்டும் சேதப்படுத்தப்பட்டு, போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையிலுள்ளன.

''இதன் காரணமாக அரசங்க, கூட்டுத்தாபன. தனியார்நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் யாழ்ப்பாணத்திற்கு கடமைக்குச் செல்லமுடியாதுள்ளது

''பல்கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும் யாழ். பல்கலைக்கழகத்திற்குச் செல்ல முடியாதுள்ளது

''பொதுமக்கள் தமது அன்றுடநடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

',பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு எரிபொருளை எடுத்துச்செல்ல முடியாதநிலை ஏற்பட்டுளளதால், இந்தப்பகுதிகளுக்கான பஸ்சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

''இதன் காரணமாக பருத்தித்துறையில் தற்போது எரிபொருள். இல்லையென்பதை நீங்கள் அறிவாகள்.

''இப்பகுதிகளுக்கு வாகனங்கள் செல்லமுடியாதுள்ளதால் சீனி, மா, அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச்செல்ல முடியாதுள்ளது

''இதனுல் இப்பகுதிமக்கள் பட்டினி நிலைக்குள்ளாகியுள்ளனர். இப்பகுதிமக்கள் பட்டினிக்குளளாவதை உங்களைப் போன்ற அதிகாரிகள் விரும்ப மாட்டார்கள்.

இந்தவீதிகள் திருத்தப்படமாட்டாதா என்பதை நெடுஞ்சாலைத் திணைக்களத்துடன தொடர்புகொண்டு அறியுமாறு, தங்களைக்கேட்டுக் கொள்கிறுேம்

''நெடுஞ்சாலைத் திணைக்களம் இந்தவீதிகளைத் திருத்தாவிட்டால், பொதுமக்கள் சிரமதானத்தின் மூலம் இவ்வீதிகளைத்திருத்த அனுமதிவழங்குமாறு கேட்டுக்கொள்கிறுேம்

இந்தவிடயத்தில் யாழ் மாவட்ட இணைப்பதிகாரியின் நற்பணிகளும், இதுதொடர்பாக அவர் உடனடிநடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் வரவேற்கத்தக்கது.

இதன் பிரதிகள் யாழ். மாவட்ட இணைப்பதிகாரிக்கும் யாழ்ப்பாணம். வல்வெட்டித்துறை, நெல்லியடி பிரஜைகள் குழுவின் செயலாளர்களுக்கும் வடபிராந்திய, பருத்தித்துறை பஸ் டிப்போ முகாமையாளர்களுக்கும், தேசிய பந்தோபஸ்து அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## அமிர்தலிங்கம்...

1-ம்பக்கம் 4ம் கலத்தொடர்ச்சி

சென்ற இனந்தெரியாத இளைஞர்கள் அவரைக் கடத்திச் சென்றனர்.

அவரது வீடு இளைஞர்களால் சுற்றி வளைக்கப்பட்டதாகவும், வான் ஒன்றில் வந்ததாகக் கூறப்படும் பத்து இளைஞர்கள் அவரின் வீட்டுக்குள் சென்று துப்பாக்கிமுனையில் அவரைக் கடத்தியதாகவும் கூறப்படுகிறது.

அவரது வீட்டிலிருந்து நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும், தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோடெக், டெலிபோன் ஆகியவையும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது

அவரது கண்ணும் வாயும் கட்டப்பட்ட நிலையில் வானில் ஏற்றிச் செல்லப்பட்டாராம்.

சம்பவம் நடந்த போது வீட்டில் திரு. அமிர்தலிங்கமும், அவரது மனைவியும் மகனும், மகளும், மருமகனும் இருந்தனர் அயலவர்கள் எவரும் பயத்தினுல் அங்கு வரவில்லை என்றும் அவர்கடத்திச் செல்லப்பட்ட பின்னரே அயலவர்களும். உறவினர்களும் இது பற்றி அறிந்து கொண்டதாகவும் தெரியவருகியது. நேற்று இரவு வரை அவர் வீடு திரும்பவில்லை. (க)

# முத்திரைக்கு

(சுன்னுகம்)

சுன்னுகம் தபாலகத்தில் நடைபெற்ற கொள்ளையைத் தொடர்ந்து அங்கு பொதுமக்களின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. தபால் எடுத்தலும், தபால் விநியோகமும் மாத்திரமே நடைபெறுகிறது.

சங்குவேலி, சுந்தரோடை பகுதி தபாலகங்களில் 60 சதம் பெறுமதியான முத்திரைகூட இல்லைஎன்று கையை விரிக்கிறுர்களாம் இதனுல் பொதுமக்கள் பலர் 60 சதம் பெறுமதியான முத்திரைகளை தனியார் சடைகளில் அநியாயவிலையில் பெறவேண்டியுள்ளது இப்பகுதியில் சில கடைகளில் 60 சதமுத்திரை 85 சதமாகவும் 1 ரூபா முத்திரை 1-25 சதமாகவும் வெளிநாட்டுக் சடிதத்திற்கு ஒட்டுவதற்குத் தேவையான 7 ரூபா முத்திரைகளுக்கு 8-75 சதம் கொடுத்து வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறுர்கள்.

## 2,000 விவசாயிகள்....

[1-ம்பக்கம்5கலத் தொடர்ச்சி[

மாக ஆண்களுக்கு தலா 40 ரூபாவும், பெண்களுக்கு 25 ரூபாவும் வழங்கப்பட்டன. இந்தச் சம்பள முறையானது இவ்வருடத்தில் ஆண்களுக்கு 25 ரூபாவாகவும், பெண்களுக்கு 15 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பளக்குறைப்பை எதிர்த்தே வேலைநிறுத்தம் நடைபெற்றுவருவதாகவும், வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டுள்ளோரில் பெரும் பகுதியினர் மலையகத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வேலைநிறுத்தத்தின் எதிரொலியாக இப்பகுதியில் அறுவடை பாதிக்கப்படலம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜி. ஸி. ஈ. (சாதாரண) பரீட்சை நடாத்த

# அனைத்து சக்திகளும் ஆதரவு அளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

'இம்மாதம் இறுயில் மீண்டும் நடத்தப்படவிருக்கும் க பொ. த சாதாரண பரீட்சையில் எதுவித இடையூறும் இல்லாமல் பரீட்சையை ஒழுங்காக நடைபெற அனைதுச் சக்திகளும் ஆதரவளிக்கவேண்டும் ''

ஐக்கிய மாணவர் பேரவையினர் நேற்று மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளனர்

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இன்று தமிழ்பேசும் மாணவர்களுக்கு இருக்கும் நெருக்கடியான சூழ்நிலையில் எம்மவர்களாலேயே பரீட்சை குழப்புதல் மாணவர் கல்விக்கு இடையூறு செய்தல் போன்ற நடவடிக்கைகள் அனைத்தும் ஒடுக்கும் அரசிற்கு சாதகமானதாகவே இருக்குமே ஒழிய மாணவர்களின் எதிர்காலத்திற்கோ அல்லது விடுதலை இயக்கங்களின் இலட்சியத்திற்கோ பயன் அளிக்கும் என நாம் கருதவில்லை.

எதிர்காலத்தில் புத்திஜீவிகளைக் கொண்ட சமுதாயததை உருவாக்குபவர்கள் இன்றிருக்கும் மாணவ சமுதாயம் என்பதை யாவரும் அறியவேண்டும் ஆகவே அவர்களின் கல்வியானது எந்த இடையூறுகளுக்கு மத்தியிலும் கல்வி கற்கக் கூடிய சூழ்நிலை இருக்கும் வரை கல்வி கற்பதே மேலானது. அதற்காக இருக்கக் கூடியதான அனைத்தும் முற்போக்கு சக்திகளும் அவர்களது கல்விக்கு ஊக்கமளித்து அவர்களை புத்திஜீவிகள் உள்ள சமுதாயம் உருவாக்கும் திறனுள்ள சக்திகளாக வளர்ப்பதற்கு முயலவேண்டுமே தவிர அவர்களின் கல்வியை இருளடிக்க முற்படக் கூடாது.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் க. பொ த. சாதாரண தரப் பரீட்சை குழப்பப்பட்டது. பெற்றுேர்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே நடத்தப்படும் எந்தப பரீட்சையையும் குழப்பாது பாதுகாக்கவேண்டும். இதற்கு பெற்றுேர்கள் பழைய மாணவர்கள் பொது ஸ்தாபனங்கள் இயக்கங்கள் அனைத்தினது ஒத்துழைப்பையும் நாடுகறுேம. (க)

# பெண் ஊழியர் வேலைஇழக்கும் அபாயம்!

(பண்டத்தரிப்பு)

தைப்பதற்கான துணிகளை கொழும்பிலிருந்து எடுத்து வருவதில் ஏற்பட்டிருக்கும் தடை காரணமாகவும். நூல் தட்டுப்பாடு காரணமாகவும் பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உடை தயாரிப்பு நிலையம் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. இங்கு கடமையாற்றும் பெண் ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயநிலை இதனுல் தோன்றியுள்ளது.

# 2-வது தடவை தற்கொலை இளைஞருக்கு கைகூடியது!

(சுன்னுகம்)

முதல் தடவை தற்கொலை முயற்சியில் தோல்விகண்ட இளைஞர் இரண்டாவது தடவையில் வெற்றி ண்டார்.

மாதல் கஞ்சிபுரம் பகுதியைச் சேர்ந்த நடராஜா திலகராஜா (22வயது) என்ற இளைஞரே தற்கொலை செய்துகொண்டவராவர் இவர்கடந்த மாதம் தூக்க மாத்திரைகளை அளவுக்கதிகமாக உட்கொண்டு தற்கொலை செய்ய முயன்றுர். யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று குணமடைந்தார்.

இரண்டாவது தடவையாக நேற்றுக்காலை பிஸ்கட், சோடா என்பவற்றுடன் கிருமிநாசினியை அருந்தி தற்கொலை செய்தார். இவர் 'அஸ்மா' நோய் தாங் முடியாமல் போகவே இந்த தடவை தற்கொலை முயற்சி மேற்கொண்டு இரண்டாவது தடவை வெற்றிகண்டார்.

# காங்கேசன் சிமெந்து ஆலை 6 மாதங்களுக்கு மூடப்படும்?

## உயர்மட்டத்தில் அரசு ஆலோசனை!!

(கொழும்பு)

காங்கேசன்துறைச் சிமெந்துத் தொழிற்சாலையை ஆறு மாதகாலங்களுக்கு மூடிவிடுவது தொடர்பாக அரசாங்கம் உயர்மட்ட ஆலோசனைகளை மேற்கொண்டுவருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அண்மைக்காலங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பலதடவைகள் இத்தொழிற்சாலை இலக்கானதென்றும், இதனுல் இங்குள்ள இயந்திரங்களின் செயற்பாடுகள் குறித்து முழுமையான மறுபரிசோதனை நடத்தப்பட வேண்டுமெனவும் அரசுக்கு ஆலோசனை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரிசோதனை சுமார் ஆறு மாதங்கள் நீடிக்கும் எனவும் கூறப்பட்டது.

ஆகையினுலேயே இத்தொழிற்சாலையை அவ் ஆறு மாதங்களுக்கும் மூடிவிட ஆலோசிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஜி. ஜி. நினைவு தினம்

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினத்தையொட்டி இன்று காலை குருநகரில் உள்ள அவரது உருவச் சிலைக்கு மாலைசூட்டி அஞ்சலி செய்யப்படுவதுடன், கோவில்களில் விசேட ஆராதனைகள் நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [க]

## 83 ஜூலை கலவரம்-

(1-ப்பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

இன்றி நடைபெற்ற இவ் விசாரணைகளை மேல் நீதிமன்ற நீதிபதி திரு.கி.பாலகிட்ணர் தொடர்ந்து ஐந்து நாட்கள் நடத்திய பின் தீர்ப்பு வழங்குவதை நேற்று வரை ஒத்தி வைத்திருந்தார்.

9 குற்றச்சாட்டுக்களிலும் எதிரியைக் குற்றவாளியாக கண்ட நீதவான் ஒவ்வொரு குற்றத்திற்கும் 7 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்து தண்டனைகள் அனைத்தையும் ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

எதிரியின் சார்பில் சட்டத்தரணி வி. சச்சிதானந்தனும் அரசதரப்பில் கே. வி சிறிஸ்கந்தகுமாரும் ஆஜராகியிருந்தனர்.

## ப. நோ. கூ. சங்க கொள்ளை

## ஊர்காவற்றுறை மக்கள் எதிர்நோக்கும் பிரச்னை

(சுண்டுக்குளி)

25 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு இதுவரை காலமும் உணவு, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களையும், எந்தவித கட்டுப்பாடுமின்றி விநியோகம் செய்துவந்த ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடந்த ஐந்து லட்சம்ரூபா கொள்ளையினுல் தொடர்ந்து பொதுமக்களுக்குச் சேவை செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தொழிற்சங்க ஊழியர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் ப. நோ. கூ. சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கொள்ளைச்சம்பவத்தைத்தொடர்ந்து சங்கத்தின் விற்பனை நிலையங்கள் யாவும் திறக்கப்படவில்லை.

ஐந்து லட்சம் ரூபா பணமும், தஸ்தாவேஜுகள் சிலவும் கொள்ளையடிக்கப்பட்டதால் சங்கம் பல பிரச்னைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவருகிறது.

நேற்றுவரை கிளைகள் திறக்கப்படவில்லை.

இங்கு நடந்த கொள்ளைச் சம்பவத்தில், சங்கக் காசாளர் செல்லையா சிற்றம்பலத்தின் நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும், இந்த நகைகளையாவது திருப்பித் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இயக்கங்களும், பொதுமக்களும் இதுவிடயமாகக் கவனம் செலுத்திச் சங்கம் தொடர்ந்து இயங்குவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

## பிரிட்டன் ..

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

னிடமிருந்து வாங்கவுள்ளஇராணுவ சாதனங்களென்றும் அது தெரிவித்துள்ளது

சீனுவிடமிருந்து வாங்கவுள்ளனவற்றில் ரைபிள் துப்பாக்கிகளே பெருமளவில் அடங்குகின்றன என்றும், ரோந்துப் படகுகளும் வாங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி]

## எம். ஜி. ஆர்.—

[1-ப்பக்க 2ம்கலத்தொடர்ச்சி]

படப் பல ஆலயங்களில் அவரது தேகசுகம்வேண்டி நேர்த்திககடன்களை வைத்திருந்தனர் இதற்காக அவர்கள் தலைமுடி, தாடி வளர்த்துமிருந்தனர் என்றும் கூறப்பட்டது தற்போது அவர்கள் அவற்றை வெட்டித் தமது கடன்களைத் தீர்க்க முற்பட்டுள்ளனராம்.

தமிழக தொழிலமைச்சர் திரு ராகவானந்தம்கூட திருப்பதி வெங்கடாசலபதி ஆலயத்திற்கு நேர்ந்திருந்தாராம். தொழகசையிலேயே கோயிலுக்குச் செல்லும் பழக்கம் தமக்கு இல்லையென்றும், ஆனுல் முதல்வர் சுகத்துடன் திரும்பியதால் தாம் அங்கு செல்லவிருப்பதாகவும் அவர் கூறினுர். [கி]

## ஊடக்கில் ..

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

நான்கு மணி வரை அமுல் செய்யப்படும். ஆனுலும், அசம்பாவித சம்பவங்கள இங்கு தலை தூக்கும் பட்சத்தில் ஊரடங்கு சட்ட நேரம் இரவு ஏழு மணி முதல் அதிகாலை நான்கு மணிவரை அமுல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் வெளியேற்றம்

[மாவிட்டபுரம்]

மல்லாகம் நீதிமன்றப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை காரணமாக அப்பகுதி மக்கள் தமது இல்லங்களைவிட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் அண்மைக்காலமாக அடுத்தடுத்து கொள்ளை, தீவைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதுடன் நேற்று முன்தினமிரவு பயங்கர சத்தத்துடன் வெடிச் சத்தங்கள் கேட்டதால் அப்பகுதி மக்கள் பெரிதும் பீதியடைந்தனர். இதன் காரணமாக அப்பகுதியிலுள்ள மக்கள் தமது இல்லங்களைவிட்டு வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### பரிஸ்டர் முத்துக்குமாரு அம்பலவாணர்

திருநெல்வேலி பரிஸ்டர் முத்துக்குமாரு அம்பலவாணர் காலமாகிவிட்டார். இவர், புவனேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், துஷ்யந்தியின் (மருத்துவ மாணவி, யாழ், வைத்தியபீடம்) அன்புக் தந்தையும், காரைநகர் காலஞ்சென்ற ம. சபாபதிப்பிள்ளை. காலஞ்சென்ற வைத்திலிங்கம், திரு. மு. இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரரும், திரு. இ சிவராசா, இ ஞானம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (10-2-85) காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் நடைபெறும்.

1755

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கனகசபை

புங்குடுதீவு-12

இவர் முன்னைநாள் கிராமசபை உறுப்பினரும், செல்லம்மாவின் அன்புக்கணவரும் கணேசு, சிவபாதம், கைலாசபிள்ளை, கோபாலபிள்ளை, விசாலாட்சி, பராசக்தி ஆகியோரின் தந்தையும், கண்ணையா ஆசிரியரின் சகோதரரும், சின்னத்துரை, செல்லத்துரை கமலாதேவி, சாந்தலெட்சுமி, ஜெயலெட்சுமி, தனலெட்சுமி ஆகியோரின் மாமனுரும் ஆவார். 9-2 85 சனிக்கிழமை 10 மணியளவில் மணற்காடு மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- க. கைலாசபிள்ளை, புங்குடுதீவு-12

1749

## இப்படியும் நடக்கிறது

''நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை ...... நடந்ததெல்லாம் நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை......''

கொழும்பிலும், டில்லியிலும் இந்தப் 'பாட்டு' ஓகோ என்று ஒலிக்கிறதாம். உண்மையா?

★ ★ ★

நேற்று, ஓர் இளம் பெண்ணின் கதையைக் கூறியிருந்தேன் அல்லவா?

''யார் அந்த அதிபர்......? யார் அந்த நல்லவர்?'' என்று தொலைபேசியில் பலர் நேற்று அன்புத் தொல்லை கொடுத்துவிட்டனர்.

மன்னிக்கவும். மீண்டும் சூசகமான தகவலையே தருகின்றேன்:

'ஆனந்த'மான முகம். 'ராஜ'நடையும் கூட. சுண்டுக்குளியில் அடிக்கடி இவரைப் பார்க்கலாம்.

— ஊடுருவி

## இலங்கை...

[1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

இலங்கையின் இனப்பிரச்னை குறித்து மிக முக்கியமான பேச்சுவார்த்தைகளை இலங்கை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சார்பில் நடத்த தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நேற்றிரவு ஏழு மணியளவில் இந்தியாவுக்குப்பயணமானுர் அமைச்சர் லலித்தை இலங்கையிலுள்ள இந்தியத் துணை ஸ்தானிகர் திரு குமுட் ரஞ்சன் சின்ஹாகட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்றிரவு வழியனுப்பிவைத்தார்.

கொழும்பிலிருந்து நேராக (முதலில்) பம்பாய் செல்லும் அமைச்சர் திரு லலித்அத்துலத்முதலி, இன்று காலை பம்பாயிலிருந்து புதுடில்லி பயணமாவார்.

நேற்றிரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தமது விஜயம் குறித்து சுருக்கமாகக் கருத்துத் தெரிவிக்கையில்: ''எனது விஜயம் மிகவும் முக்கியமானது. இதற்குமேல் ஒன்றும் கேட்காதீர்கள்'' என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

நிலைமை இவ்வாறிருக்க, அண்மையில் புதுடில்லி சென்றிருந்த மாலைதீவு ஜனுதிபதி ஜனுப் அப்துல் கயூம்; இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியைச் சந்தித்து பல்வேறு விஷயங்கள் குறித்தும் அளவளாவியபோது இலங்கைப் பிரச்னையும் முக்கிய இடம் பெற்றதாகத் தெரிவித்த புதுடில்லி வட்டாரங்கள், இலங்கை ஜனுதிபதியையும் இந்தியப்பிரதமரையும் மாலைதீவில் சந்திக்கவைக்க வாய்ப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும், இதற்கு இந்தியப் பிரதமர் பச்சை விளக்கு'க் காட்டியதாகவும் தெரியவருகிறது

இலங்கை இனப் பிரச்னையில் ஓரளவு அக்கறைகொண்டிருக்கும் மாலைதீவு ஜனுதிபதி, இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்கு அழைப்பு விடுத்ததாகவும், இதனை அவர் ஏற்றுக் கொண்டதாகவும், இதேநேரத்தில் இலங்கை ஜனுதிபதியையும் தொடர்புகொண்டு ஒரே நேரத்தில் இரு நாட்டுத் தலைவர்களையும் மாலைதீவில் சந்திக்கவைக்க ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டதாகவும் உயர்மட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது

மாலைதீவு ஜனுதிபதியின் இம்முயற்சி பெரும திருப்பத்தை ஏற்படுத்தலாமென்றும், இலங்கையிலும் இந்தியாவிலும் பெரும அக்கறைகொண்டிருக்கும் ஜனுதிபதி கயூமின இத்திட்டம் எதிர்பாராத பெரும் திருப்பங்களை உண்டாக்கலாம் என்றும், இதன் பின்னணியில் முக்கிய பெரும் நாடுகள் சம்பந்தப்பட்டிருக்கிறது என்றும் புதுடில்லி வட்டாரங்கள் ஹேஸ்யம் தெரிவித்துள்ளன.

## மீனவர்..-

[1-ம்பக்க-5ம்கலத்தொடர்ச்சி)

வாடிகளுக்கு வந்து தொழில் செய்வதற்கு இம்மாதம் நடுப்பகுதியில் வரவிருப்பதாகத் தெரியவருகிறது. (க)

## ஜனுதிபதி.....

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அவர்கள் விருப்பியவாறு குடியமர்த்தப்படவேண்டும்

''தோட்டப் பகுதி இளைஞர்கள் பலர் கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள்மீது உடனடி விசாரணை நடத்தி விரைவில் அவர்களை விடுதலை செய்ய ஒழுங்குகள்செய்யவேண்டும்

''மன்னர், முல்லைத்தீவுப் பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணமளிக்க ஏற்பாடுகள்செய்யவேண்டும்.

''புனர்வாழ்வு அலுவல்களுக்குப் பொறுப்பான அட்மிரல் பெரேராவை நஷ்டஈடு, மற்றும் தகுந்த புனர்வாழ்வு நடவடிக்கைகளைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குமாறு பணிக்கவேண்டும்'' என்றுர்.

இதேசமயம் ஜனுதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், இனப் பிரச்னைக்கு உடனடித் தீர்வு அவசியம் தேவைப்படுவதாலேயே திரு அத்துலத்முதலி இந்தியா அனுப்பப்பட்டுளளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி]

## விறகு தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் விறகிற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

## அரிசி விலையில் ....

[3ப் பக்க 5ம் கலத்தொடர்ச்சி]

உணவுக்கட்டுப்பாட்டதிகாரி, கொழும்பிலிருந்து ஒருகப்பலில் 30 தொன் பருப்பு, 200 தொன் மா, 400 தொன் சீனி ஆகியவற்றை அடுத்த புதன்கிழமையளவில் ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறைக்கு வந்து சேரும் என தெரிவித்தார்.

கொண்டுவரப்படும் மாவு கூட்டுறவுச்சங்கங்களுக்கு பட்டுமே கொடுக்கப்படும் என்றும் சீனி, பருப்பு ஆகியன சகல விற்பனவு நிலையங்களுக்கும் பங்கிட்டு வழங்கப்படுமென்றும் திரு. பற்குணம் சொன்னுர்

அவர் மேலும் தெரிவிக்கையில்,950தொன் மா திங்கட்கிழமை வந்துசேரும் என்றும் இன்றைய நிலையில் அதுபோதாதென்றும் கவலை தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஒரு மாதத்துக்கு 20 ஆயிரம் தொன் அரிசியும், 2 ஆயிரம் தொன் மா, 7 ஆயிரம்தொன் சீனி தேவைப்படுகிறது என்றும் திரு. பற்குணம் தெரிவித்தார். (மா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P O. Box 49, Telegram Tele phone number 22389-24126.